பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21. 01. 2025 7. 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து உலகின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வேளாண் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க, மாநில அரசுகளுடன் இணைந்து, அரசு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

3. அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள திரு. டொனால்ட் ட்ரம்புக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

4. நைஜீரியாவில் டேங்கர் லாரி வெடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 98ஆக அதிகரித்துள்ளது.

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி ஜகார்தாவில் இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து உலகின் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 47வது அதிபராக பதவியேற்றுள்ள திரு. டொனால்ட் ட்ரம்புக்கு சமூக வலைதளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர், இந்தியாவுக்கும் - அமெரிக்காவுக்கும் பலனளிக்கக்கூடிய வகையில் மீண்டும் இணைந்து செயல்படுவதை தாம் எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

திரு. ட்ரம்பின் பதவிக்காலம் வெற்றிகரமாக அமைவதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதனிடையே வாஷிங்டனில் அதிபராக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக உரையாற்றிய திரு. டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்காவில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த தமது தலைமையிலான அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்தார்.

தமது பிரச்சாரத்தின்போது அளித்த முக்கிய வாக்குறுதியான பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அவசர கால நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

பணவீக்கம் மிகப்பெரிய அளவில் அதிகரித்ததால் அனைத்துப் பொருட்களும் விலை உயர்ந்ததாக அவர் கூறினார்.

தற்போது புதிய அத்தியாயம் உருவாகி இருப்பதகாவும், அமெரிக்காவுக்கு தமது தலைமையில் பொற்காலம் உருவாகும் என்றும் திரு. ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

திரு. டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பு நிகழ்ச்சியில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சிறப்பு தூதராக அவர் பங்கேற்றார்.

முன்னதாக வாஷிங்டன் புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு பிரார்த்தனை நிகழ்ச்சியிலும் திரு. ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இந்தியா சார்பில் பதவியேற்பு விழாவில் தாம் பங்கேற்றது மிகப்பெரிய கௌரவம் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

வேளாண் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க, மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதிலியில் நேற்று தமது துறையின் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

ரபி பருவ பயிரிடுதலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், காலநிலை, தேசிய பூச்சிமருந்து திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு உதவுதல், வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து திரு. சிவராஜ் சிங் சௌஹான் விரிவான ஆலோசனை நடத்தியதாக வேளாண் அமைச்சக அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

இனி கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவுக்கு வருவோரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அம்மாநில அரசு விரிவான தீ தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கும்பமேளா நடைபெறும் பகுதியில் 50 தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் 4 ஆயிரத்து 300 தீயணைப்பு வீரர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதுடன், பல்வேறு நவீன ரக தீயணைப்பு வாகனங்களும், சிறப்பு பயிற்சி பெற்ற 2 ஆயிரம் வீரர்களும் தயார் நிலையில் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே மகா கும்பமேளா குறித்த செய்திகளை சேகரிக்க வந்துள்ள வெளிநாட்டு செய்தியாளர்களுடன் வெளியுறவு அமைச்சகம் மற்றும் உத்தரப்பிரதேச மாநில அரசின் உயரதிகாரிகள் புதுதில்லியில் நேற்று கலந்துரையாடினர்.

கும்பமேளாவின் மகத்துவம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார முக்கியத்துவம் குறித்த தகவல்களை அதிகாரிகள் அப்போது விளக்கிக் கூறினர்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைக்கு அடுத்த மாதம் 5ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலில் இறுதி வேட்பாளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது.

70 தொகுதிகளைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு 699 பேர் போட்டியிடுகிறார்கள்.

அதிகபட்சமாக புதுதில்லி தொகுதியில் 23 பேரும், பட்டேல் நகர் மற்றும் குறைந்தபட்சமாக கஸ்தூரிபா நகர் தொகுதிகளில் தலா 5 பேரும் போட்டியிடுகின்றனர்.

ஆயிரத்து 522 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 487 பேரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக தில்லி தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகும்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் ஒருநாள் பயணமாக இன்று சத்தீஸ்கர் செல்கிறார்.

ராய்ப்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய தொழில்நுட்ப கழகம், **Bhilai** இந்திய தொழில்நுட்பக் கழகம், ராய்ப்பூர் இந்திய தொழில்நுட்பக் கழக மாணவர்களுடன் திரு. ஜக்தீப் தங்கர் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

புதுச்சேரியில் இன்று தென்னிந்திய அறிவியல் கண்காட்சி தொடங்குகிறது.

அங்குள்ள பழைய கோட்டை மைதானத்தில் நடைபெறும் இந்த கண்காட்சியை துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு. என். ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், அமைச்சர் திரு. நமச்சிவாயம் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

ஐந்து நாட்கள் நடைபெற உள்ள இந்தக் கண்காட்சியில் தென் மாநிலங்ககளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களின் அறிவியல் தொழில்நுட்ப திறமைகளை காட்சிப்படுத்த உள்ளனர்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் **Gariaband** மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் தேடுதல் வேட்டையில் 2 மாவோயிஸ்ட்கள் கொல்லப்பட்டனர்.

பாதுகாப்புப் படை வீரர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

மாவோயிட்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து அங்கு தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினருக்கும், மாவோயிஸ்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் அவர்கள் கொல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அந்தப் பகுதியில் இருந்து தானியங்கி துப்பாக்கி ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

<<<<>>>>

அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள திரு. டொனால்ட் ட்ரம்புக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்களும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இத்தாலி பிரதமர் **Giorgia Meloni** வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இத்தாலி – அமெரிக்கா இடையேயான நட்புறவில் புதிய தொடக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இரு நாடுகளும் இணைந்து நட்புறவை மேம்படுத்துவதில் வரலாற்றுச் சாதனை படைக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கு உதவிய திரு. ட்ரம்பின் முயற்சிகளுக்காக திரு. நெதனயாகு நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

ஜெர்மன் அதிபர் **Olaf Scholz,** ஜெர்மனியின் நெருக்கமான கூட்டாளியான அமெரிக்காவுடன் நல்லுறவு மேலும் மேம்படும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து பிரதமர் **Keir Starmer** வெளியிட்டுள்ள காணொலி வாழ்த்துச் செய்தியில் இங்கிலாந்து – அமெரிக்கா இடையேயான உறவுகள் புத்துணர்ச்சியுடன் மேம்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் பிரேசில் அதிபர் **Luiz Inacio Lula Da Silva**, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் **Ursula Vonder Leyen,** ஐரோப்பிய கவுன்சில் தலைவர் **Antonia Costa,** யுக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி உள்ளிட்ட தலைவர்களும் திரு. ட்ரம்ப்புக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

நைஜீரியாவில் டேங்கர் லாரி வெடித்து ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 98ஆக அதிகரித்துள்ளது.

வடக்கு நைஜர் மாகாணத்தில் டிக்கோ என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை நேரிட்ட விபத்தில் 69 பேர் பலத்த காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எரிபொருளை சேகரிக்க மக்கள் திரண்டபோது ஏற்பட்ட மிகப்பெரும் தீ விபத்தில் ஏராளமானோர் உயிரிழந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

விபத்து பகுதியில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நேற்று 12 உடல்கள் மீட்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மேற்கு இமயமலைப் பகுதியை ஒட்டியுள்ள மாநிலங்களில் இன்று பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும், பனிப்பொழிவு நீடிக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வரிலை மையம தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டி ஜகார்தாவில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை இன்று தைவானின் **Raychan – Yu Chieh Lin** இணையை எதிர்கொள்கிறது.

ஒற்றையர் பிரிவில் லக்ஷயாசென், பிரின்ஷு ரஜாவத், கிரன் ஜார்ஜ், பி.வி. சிந்து, அகர்ஷி காஷ்யப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

-------------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**